முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை.

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.8/2025**

(*CNR.No.TNSV01000947/2024)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.151/2014 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய<br>குற்ற எண்.3/2014 |
| எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர் | 1. அன்புராமுராஜா (வயது 48)<br>த/பெ.போஸ்,<br>அறிவினார் பட்டினம், காளாப்பூர்,<br>சிங்கம்புணரி தாலுகா, சிவகங்கை.<br>அரசு மதுபானக் கடை எண்:7719.<br>(மேற்பார்வையாளர்)<br><br>2. ரவீந்திரன் (வயது 43)<br>த/பெ.கண்ணுகுடியான்,<br>278, கீழாயூர் காலனி,<br>இளையான்குடி தாலுகா, சிவகங்கை.<br>அரசு மதுபானக் கடை எண்:7719.<br>(விற்பனையாளர்) |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், 1வது எதிரி இதச பிரிவுகள் 409, 420, 120(பி)ன் கீழும் 2வது எதிரி இதச பிரிவுகள் 408, 420, 120(பி) கீழும் குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை |

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:16:06 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

| | |
|---|---|
| | வழக்கு எண்.151/2014-ல் கடந்த 29.06.2017-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 20.02.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 05.02.2025 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 21.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*V*.மதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீ ர் ப் பு ரை-

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:151/2014-ல் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம் காளாப்பூர் அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7719-ல் 30.05.2013-ம் தேதி சாட்சி 1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் திரு.கோபிநாத் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி 2 டாஸ்மாக் தாசில்தார் திருமதி விஜயகுமாரி மற்றும் ஆடிட்டர்

உதவியாளர்கள் எஸ்.கண்ணப்பன் மற்றும் எல்.ரமேஷ் இவர்களுடன் தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபானக் கடையை நூறு சதவீத தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு, இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூ.6,41,540/- மற்றும் உட்தணிக்கையில் கண்டறியப்பட்ட ரூ.3,74,140/- குறைவு தொகையையும் சேர்த்து மொத்தம் ரூ.10,15,680/- மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-ம் எதிரி பி.அன்புராமுராஜா மேற்படி கடையின் விறபனையாளர் 2-ம் எதிரி கே.ரவீந்திரன் ஆகியோர் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் இருவரும் பகிர்ந்துகொண்டும், டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூ.10,15,680/-ஐ கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது இதச பிரிவுகள் 409, 120($b$)-ன் கீழ் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், 1வது எதிரி இதச பிரிவுகள் 409, 420, 120(பி)ன் கீழும், 2வது எதிரி இதச பிரிவுகள் 408, 420, 120(பி) கீழும் குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன்

கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

*i)* விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் சாட்சிய சட்டத்திற்கு முரணாகவும் பகரப்பட்டுள்ளது.

*ii)* மேற்படி விசாரணை நீதிமன்றம் வனையப்பெற்ற குற்றச்சாட்டுகளில் 1-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 409, 420, 120(பி), 2-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 408, 420, 120(பி)-ன் படி கண்டுள்ள சரத்துகளின் படி புகாரும் முதல் விசாரணையும் அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மேற்படி பிரிவுகளின் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருந்த போதும் அதனை மெய்ப்பிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் தனது சாட்சியத்தில் சொல்லப்பட்டிருந்த நிலையில் மேற்படி குற்றப் பிரிவுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

*iii)* மேலும் புகார்தாரர் தனது புகாரில் கடந்த 30.05.2013-ம் தேதி டாஸ்மாக் கடை எண்:7719-ல் சரக்குகளின் எண்ணிக்கை பற்றி தணிக்கை செய்த போது அங்கு பணிபுரிந்த எதிரிகள் ரூ.6,41,540/- வங்கியில் செலுத்தாமலும், ரூ.3,74,140/- குறைவு தொகையாகவும் ஆக மொத்தம் ரூ.10,15,680/- பணம் அரசிற்கு செலுத்தாமல் கையாடல் செய்த விபரம் தெரிய வந்து புகார் அளிக்கப்பட்டு அதன்படி

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:16:33 +0530

மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்.3/2014 என இதச பிரிவு இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்பு இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*iv)* மேற்படி விசாரணை நீதிமன்றம் இதச பிரிவுகள் 409, 408-ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிரிவு பொது ஊழியர் அல்லது வங்கியர், வணிகர், தரகு வணிகர், தரகர், அட்டர்னி அல்லது முகவர் என்பவரின் தொழில்முறையில் எந்த வகையிலாவது ஒரு சொத்தின் மீது அந்த சொத்தைப் பொறுத்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்கின்ற நபர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேலும் பிரிவு 405 இதச படி பொது ஊழியர் எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கின்ற அல்லது அந்த சொத்தை தனது சொந்த உபயோகத்திற்கு மாற்றுகிற நபர் குற்றமுறு நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்ட நபர் ஆகிறார்.

*v)* மேற்படி பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட 1, 2 எதிரியானவர்கள் பொது ஊழியர்கள் என்ற நிலையில் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்தினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து குற்றமும் நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணம் ஆகியுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி பிரிவுகள் 409, 408 இதசவின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அதை

தவிர்த்து மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*vi)* மேற்படி பிரிவு 120(பி) குற்றம் சுமத்தப்பட்டுள்ள குற்றம் ஒரு சதி என்றால் இரண்டு அல்லது இருவருக்கும் மேற்பட்ட நபர்கள் சட்டத்திற்கு முரணான ஒரு செயலை அல்லது சட்டத்திற்கு முரணான வழியில் சட்டத்திற்கு முரண் அல்லாத ஒரு செய்கையை செய்ய உடன்படும் போது அத்தகைய உடன்படிக்கை குற்றம் ஒரு சதி என வழங்கப்படும். மேற்படி வழக்கில் 1, 2 எதிரிகள் சேர்ந்து அரசிற்கு எதிராக வேண்டுமென்றே சதி செய்து ரூ.10,15,680/- கையாடல் செய்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்ளாது விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட 1, 2 எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி நியாயபடியும் ஏற்புடையதல்ல.

*vii)* மேற்படி பிரிவு 420 இதச ஏமாற்றுதல் மற்றும் ஏமாற்றும் செயலில் ஈடுபட்டு அதன் மூலம் ஏமாற்றப்பட்ட நபரை ஒரு பொருளை கொடுப்பதற்கு அல்லது மாற்றம் செய்வதற்கு நேர்மையற்ற முறையில் தூண்டி இருக்க வேண்டும் அல்லது மற்றொருவரை தூண்டும் நேரத்தில் எதிரியின் குற்ற மனம் ஒரு காரணியாக கருத வேண்டும் என்று கூறியுள்ள நிலையில், மேற்படி வழக்கில் 1, 2 எதிரிகள் அரசாங்கத்திற்கு கேடு விளைவிக்கும் விதமாகவும் அரசாங்கத்தை ஏமாற்றும் விதமாகவும், அரசாங்கத்திற்கு இழப்பீடு ஏற்படுத்தும் விதமாக ரூ.10,15,680/- லட்சம் பணத்தை நேர்மையற்ற முறையில் அனைவரும் சேர்ந்து குற்ற மனத்துடன் அரசுக்கு செலுத்தாமல் தனது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வந்த நிலையில் மேற்படி சங்கதிகளை அரசு தரப்பினர் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியங்கள் மூலமும், ஆவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக தெளிவுபடுத்தி உள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி குற்றச்சாட்டினை ஏற்காமல் அதற்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:16:50 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

மாறாக மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து 1, 2 எதிரிகளை விடுவித்து இருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

*viii)* மேலும் ஒரு அலுவலர் மற்றும் ஊழியர் நிலையிலிருந்து வேண்டுமென்று மோசடி செய்யும் உட்கருத்துடன் வேலை தரும் நபருக்கு சொந்தமான அல்லது அவரது கைவசம் உள்ள அல்லது வேறு தரும் நபருக்கு அல்லது அவருக்கு சார்பாக தான் பெற்றிருக்கிற ஒரு பெருமதியான பத்திரம் அல்லது கணக்கு எதனையும் அளிக்க மாற்றுகிற பங்கப்படுத்துகிற அல்லது பொய்யாக்குகிற அல்லது வேண்டுமென்றே மோசடி செய்யும் உட்கருத்துடன் பொய் குறிப்பு எழுதுகிற அல்லது அப்படி எழுதுவதற்கு உடந்தையாக இருக்கிற அத்தகைய தாள் புத்தகம் கணக்கும் ஏதேனும் முக்கியமான குறிப்பை விட்டுவிடுகிற மாற்றுகிற அல்லது விட்டுவிடு அல்லது மாற்ற உடனடியாக இருக்கிறார் எவர் ஒருவரும் தண்டிக்க வேண்டியது என குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டுகளை 1, 2 எதிரிகள் ரூ.10,15,680/- கையாடல் செய்து அதனை மறைக்கும் விதமாக ஆவணங்களை அரசுக்கு எதிராக உட்கருத்துடன் மாற்றிஅமைத்து மேற்படி அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தும் விதமாக ரூ.10,15,680/- பணத்தினை கையாடல் செய்துள்ள சூழ்நிலையில் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை தண்டிக்காமல் மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*ix)* மேற்படி வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும் மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும் விசாரணை நீதிமன்றத்தில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:16:59 +0530

சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து 1 முதல் 5 எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

*x)* மேற்படி டாஸ்மாக் கடை எண்.7719-ல் எதிரி ரூ.10,15,680/- பணம் கையாடல் செய்தது அதற்கான ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அத்துடன் மேற்படி ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் விதமாக மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னீடு இந்த எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருப்பது சட்டத்திற்கு முரணாக உள்ளது.

*xi)* மேலும் அரசு தரப்பில் எதிரிகள் கையாடல் செய்ததற்கான ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் முறையாக சமர்ப்பித்து மேலும் எதிரிகள் பணிபுரிந்த டாஸ்மாக் கடைக்கு முந்தைய மாதத்திற்கு சரக்குகள் இருப்பு மற்றும் எதிரிகள் வேலை பார்த்த கடைக்கு சரக்குகள் அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் மேலும் எதிரிகள் ரூ.10,15,680/- பணம் கையாடல் செய்த பணத்தின் கணக்குகள் ஆவணங்களாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான சாட்சியத்தை நிரூப்பிக்கும் விதமாக சாட்சியம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டிய நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாது எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

*xii)* மேலும் அரசு மதுபானக் கடையில் 7719 தணிக்கைக்கு சென்ற

தாசில்தார் விஜயகுமாரி மற்றும் தணிக்கை செய்ய உத்தரவிட்ட மாவட்ட மேலாளர் கோபிநாத் ஆகியோர் சாட்சியங்கள் மேற்படி வழக்கில் விசாரிக்கப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், மேலும் மாவட்ட மேலாளர் வழக்கு போன்ற கையாடல் புகாரில் சிக்கி அவர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என கருதி விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை விடுதலை செய்திருப்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் தணிக்கை செய்த சமயத்தில் முறையாக அரசு விதிகளின்படி மாவட்ட மேலாளர் தணிக்கை செய்வதற்கு மாவட்டம் தோறும் உத்தரவிட்டு அதன்படி உரிய அலுவலர்கள் மூலமாக மாவட்டம் தோறும் மதுபானக் கடைகளில் தணிக்கை செய்யப்பட்டு மேற்படி 7719 கடையில் 1, 2 எதிரிகள் அரசுக்கு எதிராக இழப்பு ஏற்படுத்தும் விதமாக கையாடல் செய்துள்ள நிலையில் மேற்படி அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை கருத்தில் கொண்டும் விசாரணை நீதிமன்றம் மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டுமே தவிர மாறாக மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து இந்த எதிரிகளை விடுதலை செய்திருப்பது ஏற்புடையதல்ல.

*xiii)* மேலும் எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கினை எதிரி குற்றமற்றவர் என விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்கு எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையிலும் மேலும் எதிரிகள் மேற்படி கடையில் மேலாளராக பணி புரியவில்லை என எவ்வித சான்றாவணங்களையும், சாட்சியங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையில், மேலும் எதிரிகள் தான் செய்த தவறினை ஒப்புக்கொண்டு கையாடல் செய்த பணத்தினை திரும்ப செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு 1-ம் எதிரி ரூ.1,55,000/-

செலுத்தி உள்ள நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மேற்படி கடையில் பணிபுரிந்து கையாடல் செய்யாதது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்டவிதிகளுக்கு முரணாக உள்ளது.

*xiv)* மேலும் அரசு தரப்பில் 1 முதல் 4 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மேற்படி 1-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 409, 420, 120(பி) மற்றும் 2-ம் எதிரி மீது இதச பிரிவுகள் 408, 420, 120(பி) பிரிவுகளின் படி குற்றம் புரிந்ததாக சாட்சியங்கள் மூலமும், சான்றாவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிரிகளையும், 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2-ம் எதிரி விற்பனையாளராகவும் பணிபுரிந்து ரூ.10,15,680/- பணம் கையாடல் செய்து மேற்படி பணத்தினை அரசிற்கு செலுத்தாமல் தனது சொந்த செலவிற்கு செலவு செய்து வந்துள்ளார்கள் என்று கருத்தில் கொண்டு மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

*xv)* மேற்படி மதுபான கடையில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2-ம் எதிரி விற்பனையாளராகவும் பணிபுரிந்து ரூ.1,55,000/- பணம் கையாடல் செய்து செய்த பணம் திருப்பி செலுத்தியது போக மீதமுள்ள பணம் ரூ.8,60,680/- இன்று வரை எதிரிகள் வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.8,60,6800/- பணம் இன்று வரை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:17:25 +0530

அரசிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி விசாரணை நீதிமன்றம் எதிரிகள் இழப்பு ஏற்படுத்தியது உண்மை என அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரிய வருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு 1, 2 எதிரிகள் கையாடல் செய்த பணம் புகாரில் முரணாக உள்ளது என்று கருதி 1, 2 எதிரிகளை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

எனவே, மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.151/2014-ல் கடந்த 29.06.2017-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6. <u>இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்</u>:-**

1 விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 408, 409, 420, 120(பி)-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டு பட்டிகை வழக்கு எண்.151/2014-ல் கடந்த 29.06.2017-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரிகள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுதலை செய்து பிறப்பித்த தீர்ப்பு ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**பிரச்சனைகள் : 1 முதல் 3:-**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம் காளாப்பூர் அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7719-ல் 30.05.2013-ம் தேதி சாட்சி 1 சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் திரு.கோபிநாத் அவர்கள் உத்தரவுப்படி சாட்சி 2 டாஸ்மாக் தாசில்தார் திருமதி விஜயகுமாரி மற்றும் ஆடிட்டர் உதவியாளர்கள் எஸ்.கண்ணப்பன் மற்றும் எல்.ரமேஷ் இவர்களுடன் தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபானக் கடையை நூறு சதவீத தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு, இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூ.6,41,540/- மற்றும் உட்தணிக்கையில் கண்டறியப்பட்ட ரூ.3,74,140/- குறைவு தொகையையும் சேர்த்து மொத்தம் ரூ.10,15,680/- மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-ம் எதிரி பி.அன்புராமுராஜா மேற்படி கடையின் விற்பனையாளர் 2-ம் எதிரி கே.ரவீந்திரன் ஆகியோர் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் இருவரும் பகிர்ந்துகொண்டும், டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூ.10,15,680/-ஐ கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 409, 420-120(*b*)-ன் கீழும், 2-வது எதிரி மீது இதச பிரிவுகள் 408, 420, 120(*b*)-ன் கீழும் குறிப்பிட்டு எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் 1-வது எதிரி இதச பிரிவுகள் 409, 420, 120(பி)-ன் கீழும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:17:41 +0530

2-வது எதிரி இதச பிரிவுகள் 408, 420, 120(பி)-ன் கீழும் குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 திரு.கண்ணப்பன், அ.சா.2 ரமேஷ் என்பவர்கள் தணிக்கை மேற்கொண்டு அறிக்கை வழங்கியது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.3 இவ்வழக்கை பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்தது பற்றி கூறும் சாட்சி. அ.சா.4 இவ்வழக்கை மேல்விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு சம்பவத்தின் போது அவர்கள் தான் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட டாஸ்மாக் கடையில் வேலை பார்த்து வந்தார்கள் என்றும், கடந்த 2014 ஆம் ஆண்டு பல வேலைகள் பார்த்ததாகவும், ரபீக் ராஜா லாரி சர்வீசில் கண்டக்டராக வேலை பார்த்ததாகவும், அதற்கு முன்பாக கடந்த 2013 ஆம் ஆண்டு டாஸ்மாக்கில் வேலை பார்த்ததாகவும், 30.03.2013-ம் தேதி திருப்பத்தூர் தாலுகா காளாப்பூர் என்ற இடத்திலுள்ள டாஸ்மாக் கடை எண் 7719-ல் ஸ்டாக் செக்கிங் செய்து கணக்குகளை ஆய்வு செய்ததில் சார்ட்டேஜ் இருந்தது என்றும், மதுபாட்டில்கள் மற்றும் பணம் சேர்த்து மொத்தமாக ரூ.6,41,540/- சார்ட்டேஜாக இருந்தது என்றும், தன்னுடன் ரமேஷ் என்பவர் உடன் வந்தார் என்றும், தான் வழங்கிய ஆய்வறிக்கையின் சான்றொப்பமிட்ட ஜெராக்ஸ் நகல் அசாஆ.1 என்றும், போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை

விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10)** மேலும் அ.சா.1 தன் குறுக்கு விசாரணையில், தான் 10-ம் வகுப்பு வரை முடித்துள்ளதாகவும், தான் ஆடிட்டர் இல்லை என்றும், தான் அரசாங்க பணியில் இல்லை என்றும், அசாஆ.1 ஆவணம் தணிக்கை அறிக்கை இல்லை என்றும், தான் தாக்கல் செய்துள்ள தணிக்கை அறிக்கையில் தணிக்கையின் போது குறைவான பாட்டில்களை தனியாக போட்டு காட்டியுள்ளேன் என்றும், அன்றைய தினம் தணிக்கைக்கு செல்லும்போது விஜயகுமாரி என்ற தாசில்தாரும் வந்ததாகவும், தான் தாக்கல் செய்துள்ள தணிக்கை அறிக்கையில் தானும் தன்னுடன் வந்த ரமேஷ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், ஆனால் வட்டாட்சியர் விஜயகுமாரி கையொப்பம் செய்யவில்லை என்று கூறியுள்ளார்.

**11)** அசா.2 தன் முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு பாலசுப்பிரமணியம் என்ற ஆடிட்டரிடம் அசிஸ்டென்டாக வேலை பார்த்து வந்ததாகவும், கடந்த 30.05.2013-ம் தேதி கடை எண்:7719 என்ற டாஸ்மாக் கடை உள்ள திருப்பத்தூர் வட்டம் காளாப்பூரில் உள்ளது என்றும், அதில் தானும், அசா1-ம் ஸ்டாக் செக் செய்ததாகவும், மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்) அவரது உத்தரவின் பேரில் தான் அந்தக் கடையை அன்றைய தினம் ஆய்வு செய்ய சென்றதாகவும், அந்த கடையில் மதுபானங்களின் ஸ்டாக் நோட்டு மற்றும் சரக்கு இருப்பு ஆகியவற்றை ஆய்வு செய்ததில் ரூ.6,41,540/- சார்ட்டேஜ் இருந்தது என்றும், தன்னிடம் காட்டப்படும் அசாஆ.1-ல் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:17:58 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

12) மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தான் ஆய்விற்கு செல்லும் போது தன்னுடன் அ.சா.1 கண்ணப்பனும் தாசில்தார் விஜயகுமாரி என்பவரும் உடன் இருந்ததாகவும், தான் தனியார் ஆடிட்டர் அலவலகத்தில் பணிபுரிந்தேன் என்றும், அன்றைய தினம் டாஸ்மாக் கடைக்கு ஆய்வுக்கு செல்லுமாறு தான் வேலை பார்க்கும் ஆடிட்டர் உத்தரவிடவில்லை என்றும், டாஸ்மாக் மாவட்ட மேலாளர் கோபிநாத் மீது கையாடல் செய்ததாகவும், மோசடி செய்ததாகவும் பல வழக்குகள் உள்ளது என்றும், அன்றையதினம் ஆய்வின் போது சரக்கு குறைந்தது என்று கணக்கிட்டு ஆடிட்டிங் நோட்டில் காட்டியுள்ளோம் என்றும், அவ்வாறு தாங்கள் கொடுத்த தங்கள் அறிக்கையில் இருப்பு என்னென்ன வகையான பாட்டில்கள் எவ்வளவு குறைந்தது என்று தனியாக பிரித்து காட்டி தனியாக மதிப்பு காட்டவில்லை என்றும், இருப்பு குறைவு மொத்தமாக கணக்கிட்டு தோராயமாக காட்டியுள்ளோம் என்றும், அன்றைய தினம் ஆய்வில் போது பில் புக்கை பார்வையிடவில்லை வேறு ஆவணங்களை சரிபார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

13) மேலும் இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கின் அரசு தரப்பில் காளாப்பூர் அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண் 7719-ல் 30.05.2013-ம் தேதி சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் திரு.கோபிநாத் அவர்கள் உத்தரவுப்படி டாஸ்மாக் தாசில்தார் திருமதி விஜயகுமாரி மற்றும் ஆடிட்டர் உதவியாளர்கள் அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்களுடன் சென்று தணிக்கை மேற்கொண்டபோது சரக்கு வரவு, இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூபாய் 6,41,540/- மற்றும்

உட்தணிக்கையில் கண்டறியப்பட்ட ரூ.3,74,140/- குறைவு தொகையையும் சேர்த்து மொத்தம் ரூ.10,15,680/-ஐ மேற்பார்வையாளாராக பணிபுரிந்த 1வது எதிரியும், மேற்படி கடையின் விறபனையாளராகிய 2வது எதிரியும், ஒன்று சேர்ந்து கையாடல் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கில் சம்பவ சமயத்தில் சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் நிறுவன மண்டல மேலாளராக பணிபுரிந்த கோபிநாத் என்பவர் எதிரிகள் மீது புகார் மனு கொடுத்துள்ளார் என்பதும், ஆனால் மேற்படி புகார்தாரர் நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகி சாட்சியமளிக்கவில்லை என்பதும் தெளிவாக தெரிகிறது.

**14)** மேலும் புகார்தாரர் கோபிநாத் என்பவர் நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகி சாட்சியமளித்திருந்தால் 30.05.2013 அன்று முழு தணிக்கை செய்ய புகார்தாரரால் பட்டியல் சாட்சி 2 முதல் 4 நபர்களுக்கு உத்தரவிடப்பட்டதா என்பதும், புகார்தாரர் உத்தரவின் பேரில் தான் மேற்படி தணிக்கை செய்தார்களா என்பதும், எதன் அடிப்படையில் சம்பவ சமயத்தில் அசா.1, 2 சாட்சிகள் தணிக்கை செய்ய புகார்தாரரால் நியமிக்கப்பட்டனர் என்பதும், மேற்படி அசா.1, 2 சாட்சிகள் அரசு தணிக்கை அதிகாரிகளாகவோ, பயிற்சி பெற்ற நபர்களாகவோ இல்லாதபட்சத்தில் எதன் அடிப்படையில் மேற்படி நபர்கள் தணிக்கை செய்ய புகார்தாரரால் நியமிக்கப்பட்டார்கள் என்பதும், புகார்தாரர் நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகி மேற்படி விவரங்கள் குறித்து சாட்சியமளித்திருந்தால் மட்டுமே 30.05.2013 அன்று நடைபெற்றதாக கூறப்படும் முழு தணிக்கை சட்டப்படியான முறையில் தான்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:13:15 +0530

மேற்கொள்ளப்பட்டதா என்பதும், மேலும் அரசு தரப்பு வாதத்தின்படி பட்டியல் சாட்சி 2 தாசில்தார் தலைமையில் அசா.1, 2 சாட்சிகள் 30.05.13-ல் புல தணிக்கை செய்ததாகவும், ஆனால் பட்டியல் சாட்சி-2 தாசில்தார் திருமதி.விஜயகுமாரி என்பவரும் இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதும், கடந்த 30.05.2013-ல் அரசு தரப்பில் கூறுவது போல் 1, 2 எதிரிகள் பணிபுரிந்த டாஸ்மாக் கடை எண் 7719-ல் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 நபர்களால் உண்மையில் முழு தணிக்கை செய்யப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15)** மேலும் இவ்வழக்கில் அசாஆ.5 தணிக்கை அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தினசரி விற்பனை சிட்டா, சரக்கு வருகை பதிவேடு, சரக்கு இருப்பு மற்றும் விற்பனை பதிவேடு ஆகியவை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், மேலும் மேற்படி அசாஆ.5 ஆவணத்தில் இறுதியில் கையாடல் தொகை ரூ.6,41,540/-ல் இதுநாள் வரை ரூ.1,55,000/- மட்டுமே மேற்பார்வையாளர் அன்புராமுராஜா (1ம் எதிரி) டாஸ்மாக் கணக்கில் செலுத்தியுள்ளார் என்பதையும், மீதித்தொகை ரூ.4,86,540/- பறிமுதல் செய்து தருமாறும், உரிய குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறும் மேற்படி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்பதையும், எதிரிகள் கையாடல் செய்ததாக கூறப்படும் தொகையில் ஒரு பகுதியினை 1ம் எதிரி செலுத்திவிட்டதாக புகார்தாரரே மேற்படி அசாஆ.5 ஆவணத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் என்ன காரணத்திற்காக எதன் அடிப்படையில் முழு தொகை ரூ.6,41,540/- கையாடல் செய்ததாக எதிரியின் மீது 22.01.2014-ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்பதற்கு எவ்வித விளக்கமும்

அளிக்கப்படவில்லை என்பதையும், மேலும் இவ்வழக்கில் புகார்தாரரும், பட்டியல் சாட்சி 2-ம் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்பதையும், முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ள கையாடல் செய்த தொகை ரூ.6.41,540/-ம் மேலும் ரூ.3,74,140/- ஆக மொத்தம் ரூ10,15,680/- எதிரிகள் கையாடல் செய்ததாக குற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்தாலும், கூடுதல் தொகை எதிரிகளால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் விதத்தில் சாட்சிகளோ, ஆவணங்களோ அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதையும், மேலும் இவ்வழக்கில் 1-ம் எதிரியிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்பதை நிரூபிக்கும் விதத்தில் அத்தாட்சி சாட்சிகள் யாரும் விசாரணை நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகி சாட்சியமளிக்கவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**16)** எனவே மேற்கண்ட வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென்று விடுதலை செய்து தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.151/2014-ல் கடந்த 29.06.2017-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:18:31 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:18:38 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.8/2025
சீரான/வரைவு/ தீர்ப்புரை
நாள்: 21.04.2026